*8*

# நமது பாவங்களைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்?

## (4:11-16)

தேவனுடைய பிள்ளையின் வாழ்வில் பாவம் என்பது பயங்கரமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடும். பாவம் என்பது இஸ்ரவேல் மக்களுக்குச் செய்தது என்ன என்பதை நாம் கண்டிருக்கிறோம்: அது அவர்களின் இருதயங்களைக் கடினப்படுத்திற்று, அவிசுவாசத்தை உண்டாக்கிற்று மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்காதபடி ஒரு சந்ததி முழுவதையுமே தடுத்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அதே துரதிர்ஷ்டங்கள் கிறிஸ்தவர்கள் மீதும் விழக்கூடும் என்று கூறினார். இஸ்ரவேல் மக்கள் செய்த தவறுகளைச் செய்யாதபடி அவர் தமது வாசகர்களை ஊக்கப்படுத்தினார் (வசனம் 11).

பாவம் அவ்வளவு பயங்கரமானது என்றால், அதைப்பற்றிச் செய்யக்கூடியது என்ன? குறிப்பாக, தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் தமது பாவத்தைக் குறித்து என்ன செய்ய வேண்டும்? புத்திமதி கூறுதலின் இரண்டாவது பகுதியை (4:1-16) முழுமையான வகையில் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இந்த எடுத்துரைப்பில் நாம், நம் வாழ்வில் உள்ள பாவத்தைக் குறித்து நீங்களும் நானும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நடைமுறை ஆலோசனைகள் இரண்டைக் காண்பதற்காக, கடைசி ஆறு வசனங்களை நெருக்கமாகக் கண்ணோக்குவோம்.

### அவற்றை நாம் மறைக்க முடியாது (4:11-13)

மக்கள் தங்கள் பாவங்களை பல மாறுபட்ட வழிகளில் கையாளுகின்றனர். சிலர் அவற்றை மறுக்கின்றனர்; மற்றவர்கள் அவற்றைப் புறக்கணிக்கின்றனர்; பலர் அவற்றிற்குச் சாக்குப்போக்குகள் கூறுகின்றனர். அவற்றை *மறைக்க* முயற்சி செய்பவர்களும் இருக்கின்றனர். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் செயல் விளைவில், நமது பாவங்களை மறைப்பது சாத்தியமற்றது என்றே கூறினார். அவற்றை வசனம் வெளிப்படுத்துகிறது (வசனம் 12). மற்றும் நாம் பாவம் செய்யும்போது தேவன் அறிகிறார் (வசனம் 13).

**வசனம் நமது பாவங்களை வெளிப்படுத்துகிறது (4:12).**

முதல் பார்வையில் 12 மற்றும் 13 வசனங்கள், எழுத்தாளர் கூறிக்கொண்டிருந்தவற்றுடன் நேரடியாகப் பிணைக்கப் பட்டிராதவை போன்று தோன்றுகிறது; ஆனால் 14ம் வசனத்தில் உள்ள "இதற்கான காரணத்தைக் காண்பித்தல்" என்ற அர்த்தப்படும், *gar* என்ற வார்த்தையானது, இவ்வசனங்களை

முந்திய கலந்துரையாடலுடன் இணைக்கிறது. இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய வசனத்தைக் கவனிக்காத காரணத்தால் விழுந்து போயினர். வேதவசனங்களின் போதனைக்கு நெருக்கமான கவனத்தை நாம் செலுத்தவில்லை என்றால், அதே விஷயம் நமக்கும் உண்மையாகி விடும்.

சந்தர்ப்பப் பொருளில் ''தேவனுடைய வசனம்'' என்பது, நிருபத்தின் இப்பகுதியில் எழுத்தாளர் மேற்கோள் காண்பித்த பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைக் குறிக்கிறது, ஆனால் செய்தியானது, வெளிப்படுத்தப் பட்டுள்ள தேவனுடைய சித்தம் யாவற்றிற்கும் நடைமுறைப்படுகிறது. வசனம் எவ்வளவு வல்லமையுள்ளதாக இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்கு எழுத்தாளர், விவரிப்புச் சொற்றொடர்களைக் குவித்தார். முதலாவதாக இது, "ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்" இருக்கிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சங்கீதம் 95ல் இருந்து மேற்கோள் காண்பித்தார். சங்கீதம் செத்துப்போயிருக்கவில்லை; அது ஒரு ஜீவனுள்ள செய்தியைக் கொண்டிருந்தது. "வல்லமை" என்பது "ஆற்றல்" என்ற வார்த்தையை நாம் எந்த வார்த்தையில் இருந்து பெற்றுக்கொள்கிறோமோ, அந்த வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. வசனம் ஜீவனும் வல்லமையும் உள்ளதாக இருப்பதால், அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியும் (காண்க ஏசாயா 55:11).

தேவனுடைய வசனம் "இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்" உள்ளது (வசனம் 12அ). பட்டயம் என்ற வார்த்தையின் சித்தரிப்பில் இருந்து பல பாடங்கள் தரவழைக்கப்படமுடியும் (காண்க எபேசியர் 6:17), ஆனால் நோயாளியின் உடலை மருத்துவரின் கத்தி திறந்து அவரது உடலின் உள்ளான உறுப்புக்களை வெளிப்படுத்தும் வகையைப் பற்றி இவ்வசனம் சிந்திக்கிறது எனலாம். வசனமானது மிகவும் ஜாக்கிரதை நிறைந்த வகையில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள பாவத்தைக் கூட வெளிப்படுத்த முடியும்.

இருபுறமும் கருக்குள்ள பட்டயம் - தேவனுடைய வசனம் - "ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக" உருவக் குத்துகிறது (வசனம் 12ஆ). "ஆத்துமா மற்றும் ஆவி" ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்துவதற்குக் கல்வியாளர்கள் பிரயாசப்படுகின்றனர் மற்றும் இவ்விடத்தில் எழுத்தாளர் "கணுக்களையும் ஊனையும்" உள்ளடக்கியது ஏன் என்று அவர்கள் திகைப்படைகின்றனர். எழுத்தாளரின் வார்த்தைகள் அனேகமாக, முழுமையான வகையில் ஒரு நபர், "ஆவி ஆத்துமா சரீரம் (இது கணுக்களையும் எலும்புகளையும் உள்ளடக்குகிறது)" (1 தெசலோனிக்கேயர் 5:23) ஆகியவற்றைக் கொண்டுள்ளார் என்ற வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன எனலாம், தேவனுடைய வசனம் ஒரு மனிதரின் *எல்லா* விஷயங்களையும் வெளியரங்கமாக்குகிறது என்பதே செய்தியாக உள்ளது. நாம், நேர்மையான இருதயத்துடன் வசனத்திற்குள் பார்த்தோம் என்றால், நமது உண்மையான இயல்பை நாம் காண்போம் (யாக்கோபு 1:22-25).

ஆகையால் வசனம், "*இருதயத்தின்* நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (வசனம் 12இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இஸ்ரவேல் மக்கள் *இருதயப்* பிரச்சனையினால் வனாந்தரத்தில் விழுந்தார்கள். நமது வாழ்வு தேவனுடைய வசனத்துடன் ஒப்பிடப்படுகையில், நமது

*இருதயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.*

***நாம் பாவம் செய்யும்போது தேவன் அறிகிறார் (4:13).***

*எழுத்தாளர் சுலபமாக, தேவனுடைய வசனத்தில் இருந்து தேவனிடத்திற்கு கடந்து சென்றார். தேவனுடைய வசனம் என்பது அவரைப் பற்றிய சொல்விளக்கமாகவே உள்ளது; இவ்விரண்டும் பிரிக்கப்பட முடியாது.*

*எவரொருவரும் தேவனிடத்தில் இருந்து தம்மை ஒளித்துக்கொள்ள முடியாது என்று வசனப்பகுதி கூறுகிறது: "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை" (வசனம் 13அ). தேவன் எல்லாவற்றையும் அறிகிறார். "சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" (வசனம் 13ஆ).* KJV *வேதாகமத்தில் ''சகலமும் நிர்வாணமாக உள்ளன'' என்றுள்ளது, இது கிரேக்க வசனத்தின் நேரடித் தரவழைப்பாகும். தனிநபர் ஒருவர் தமது உடலில் உள்ள வடுக்களை மறைக்கத் தம்மால் முடிந்த ஒவ்வொன்றையும் செய்தல் பற்றி நினைத்துப் பாருங்கள்.[1] பின்பு அவர் தமது சங்கடத்தில் தமது உடைகளை உறிந்து போடுதலையும் ஒவ்வொரு வடுவும் வெளிப்படுத்தப்படுவதையும் சிந்தித்துப் பாருங்கள். அதுபோன்றே, புறம்பான மார்க்கக் காட்சி எப்படிப்பட்டதாக இருந்தாலும் தேவன்,* உண்மையில் *நாம் என்னவாக இருக்கிறோம் என்பதைக் காணுகிறார்.*

*சகலமும் ''அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (வசனம் 13இ). சரியாக இப்போது தேவன், நம்மைப் பற்றிய எல்லாவற்றையும் அறிகிறார், மற்றும் ஒருநாளிலே நாம் நியாயத்தீர்ப்பில் அவருக்கு முன்பாக நின்று, நாம் கூறியுள்ள மற்றும் செய்துள்ள எல்லாவற்றைக் குறித்தும் அவரிடத்தில் கணக்கு ஒப்புவிப்போம். நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி நமது வாழ்வை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே இதிலிருந்து நாம் பெறவேண்டிய முடிவாக உள்ளது!*

## நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு இரக்கத்திற்காக இயேசுவினிடம் திரும்ப வேண்டும் *(4:14-16)*

*நாம் நமது பாவங்களை ஒளித்து வைக்க முடியாது என்றால், அவற்றைப் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும்? அவற்றை நாம் ஒப்புக்கொண்டு இரக்கத்திற்காக இயேசுவினிடம் திரும்ப வேண்டும். 14 முதல் 16 வரையிலான வசனங்கள், நமது இரக்கம் நிறைந்த பிரதான ஆசாரியரான இயேசுவைப் பற்றிய ஆச்சரியம் நிறைந்த சத்தியங்களைக் கொண்டுள்ளது. மூன்று வசனங்கள், ஒரு பாலமாகச் செயல்பட்டு, புத்திமதி கூறும் பகுதியை முடித்து வைத்து, இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதன் மீதான போதனைப் பகுதியை அறிமுகப்படுத்துகின்றன. இயேசு நமது பிரதான ஆசாரியராக இருப்பதால், "நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்" - அதாவது, நாம் ஞானஸ்நானம் பெறும் முன்பு பண்ணின அறிக்கையை, இயேசுவே கிறிஸ்து என்று நாம் பண்ணின அந்த அறிக்கையை (காண்க நடபடிகள் 8:35-38;* KJV*) உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று 14ம் வசனம்*

*கூறுகிறது. அந்த அறிக்கையை நாம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், நாம் ஒருக்காலும் அவரை விட்டுப் பிரிய மாட்டோம் அல்லது அவரைப் பின்பற்றுவதை விட்டு ஒழிக்க மாட்டோம்.*

***பரிதபிக்கும் பிரதான ஆசாரியரை நாம் கொண்டுள்ளோம் (4:15).***

*15ம் வசனத்தை நேர்மறையான சொற்றொடர் ஆக்குவதென்றால், ''நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடியவரும், எல்லாவிதத்திலும் நம்மைபோல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்'' என்று வாசிக்க வேண்டும். கிரேக்கர்களின் கடவுள்கள் நபர்த்துவம் அற்றவையாக இருந்தன; இந்தக் கடவுள்கள் உணர்வுகள் இல்லாது இருந்தனர் என்றுகூடக் கிரேக்கத் தத்துவஞானிகளில் சிலர் போதித்தனர். மற்றும் இந்தக் கடவுள்கள் பாவமின்றி இருந்தன என்று எவரொருவரும் நம்பவில்லை. கிரேக்க புராணங்களின்படி, கடவுள்கள் ஒலிம்ப்பஸ் மலையிலிருந்து வந்தபோது, அவர்கள் மிகவும் மோசமான மனிதர்களைப் போல் நடந்து கொண்டனர். நமது பிரதான ஆசாரியருடன் ஒப்பிடத்தக்கவராக கிரேக்க எழுத்துக்களில் எவரொருவரும் இருக்கவில்லை: தம்மைப் பின்பற்றுபவர்கள் சகிக்க வேண்டியிருந்தவற்றைத் தாமும் சகித்திருந்ததால், அவர்கள்மீது பரிதபிக்கும் பாவமில்லாத தெய்வீக ஜீவி.*

***நாம் தைரியத்துடன் அவருக்கு முன்பாக வர முடியும் (4:16).***

*"ஆதலால், ... தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (வசனம் 16அ). ஒருநாளில் இயேசுவின் அரியணை நியாயத்தீர்ப்பின் அரியணையாக இருக்கும்; ஆனால் இன்று தேவனுடைய உண்மைநிறைந்த பிள்ளைக்கு அது, "கிருபாசனமாக" உள்ளது, இது "கிருபை வாசம்பண்ணுதல் என்ற பண்பைக் கொண்ட அரியணை" என்று அர்த்தப்படுகிறது.*

*நாம், "இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும்" கிட்டிச்சேர வேண்டும் (வசனம் 16). இரட்சிக்கப்படுவதற்கு நமக்கு இரக்கமும் கிருபையும் தேவைப்படுகின்றன. இரட்சிக்கப் பட்டவர்களாக நிலைத்திருப்பதற்கும் நமக்கு இரக்கமும் கிருபையும் தேவைப்படுகின்றன. "ஏற்ற சமயத்தில்" என்ற சொற்றொடர் "ஏற்ற காலத்தில் உதவிக்காக" என்று அர்த்தப்படுகிறது. நம்மைப் புரிந்துகொள்கிற ஒரு இரட்சகருக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. அவரது "ஏற்ற காலத்தில் உதவி"க்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!*

*நமது பாவங்களைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்? நம்மால் அவற்றை மறைக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட நிலையில், நாம் அவற்றில் இருந்து மனந்திரும்பி நம்பிக்கை நிறைந்த கீழ்ப்படிதலில் இயேசுவினிடமாகத் திரும்ப வேண்டும் (5:8, 9; மாற்கு 16:15, 16). இரக்கத்திற்கு நாம் அவரைக் கண்ணோக்க வேண்டும். உண்மைநிறைந்த கிறிஸ்தவர்கள் என்ற வகையிலும்கூட, சிலவேளைகளில் நாம் ஊக்கம் இழந்து போயிருக்கலாம். இது நடைபெறும்போது, இயேசு நமக்கு "தேவையான வேளையில்" உதவும்படிக்கு ஜெபத்தில் அவரிடம் நாம், "கிட்டிச் சேர" வேண்டும்.*

குறிப்பு

*[1]உலகில் நான் வாழும் பகுதியில் இது, ஒருவரை உயரமானவராகத் தோன்றச் செய்யும் காலணிகள், பட்டை திணித்த தோல்பட்டிகளைக் கொண்டு நன்கு தைக்கப்பட்ட உடைகள், தொப்பிகள் ஆகியவற்றையும், ஒரு இடைக்கச்சை அல்லது திறமையாகச் செய்யப்பட்ட ஒப்பனையும் கூட உள்ளடக்கலாம். உலகில் உங்கள் பகுதியில், தோற்றத்தை உயர்த்திக்காட்டும் செயல்முறைகள் மீது கவனம் குவியுங்கள்.*